# யாழ்ப்பாண பொதுசன நூலகம்


[எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள்]

## 01.06.2015



## உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு

- தங்க. முகுந்தன்



**Rev. Fr. Dr. Hayasinth Singarayar David**

**( 28.05.1907-01.06.1981 )**

நூலகம் எரிகிறது என்பதைக் கேள்வியுற்று
உயிர் நீத்த
(அந்தக் காட்சியை தான் வாழ்ந்து வந்த
சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியிலிருந்து
பார்த்த மாத்திரத்திலேயே
அவர் மாரடைப்பால் மரணித்திருக்கலாம்)
33 மொழிகளில் புலமை பெற்றிருந்த
தும்பளை அருட்தந்தை
**கலாநிதி ஹயசிந் சிங்கராயர் தாவீது**
அடிகளாரின் பாதத்தில் இந்நூலை
சமர்ப்பணம் செய்கின்றேன்!

ஆவணப்படுத்தலில் வரலாற்றுப் பதிவு தவறானதாக இருக்கக்கூடாது என்பதில் அதிக அக்கறை கொண்டு யாழ்ப்பாணத்தின் பெருஞ் சொத்தாக அறிவுப் பொக்கிசமாக இன்றும் மதிக்கப்படுகின்ற - ஏன் எமக்கு ஒரு கல்விக் கோயிலாகத் திகழும் பொது நூலகத்தின் வரலாற்றை இன்று நூலகம் எரிக்கப்பட்டு 34 ஆண்டுகளின் பின் அதே ஜூன் முதலாந்திகதி திங்கட்கிழமை நூலகத்தைப் பயன் படுத்துவோருக்காக இத் தொகுப்பை வெளியிடுகின்றேன். (இந்நூல் வெளியிடப்படுவதன் முக்கிய நோக்கம் என்னவெனில் பலரும் நூலகம் 1981. மே. 31 இரவு எரிக்கப்பட்டதாகவே எண்ணிக் கட்டுரைகளையும், செய்திகளையும் எழுதி வருகிறார்கள்! இது தவறு ஆனி 1 இரவு தான் எமது அறிவாலயம் அழிக்கப்பட்டது)

**யாழ்ப்பாண நூலகம் பற்றி**

1. எழில்மிகு யாழ்ப்பாணம் குடிநல - சுகாதார வாரமலர் 1968
2. யாழ்ப்பாண மாநகர சபை வெள்ளிவிழா மலர் 1974
3. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, (1981)
4. யாழ்ப்பாண பொது நூலகம் மீள்விக்கப்பெற்ற கட்டடத் திறப்பு விழா மலர், (1984)
5. யாழ் மாநகர சபை பொன் விழா மலர் (2002)
6. யாழ்ப்பாண நூல்நிலையம் - ஓர் ஆவணம் - மூதறிஞர் க.சி. குலரத்தினம்
7. யாழ்ப்பாணப் பொது நூலகம் - ஒரு வரலாற்றுத் தொகுப்பு என். செல்வராஜா
8. யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது - வி.எஸ் துரைராஜா
9. ஒரு வரலாற்றுக் குற்றம் - NON
10. தீ தின்ற தமிழர் தேட்டம் - யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதைத் தொகுப்பு - என். செல்வராஜா

ஆகிய புத்தகங்களை நான் படித்துப் பார்த்திருக்கிறேன். இவற்றைவிட சோமீதரனின் எரியும் நினைவுகள் ஆவணப்படம் - ('Burning Memories'- A Video documentary by Someetharan) மிகமுக்கியமானது!

மேற்குறிப்பிட்ட நூல்களில் 3 ஆவதாகக் குறிப்பிட்ட மீண்டும்

யாழ்ப்பாணம் எரிகிறது(1981) நூலில் நடைபெற்ற சம்பவங்கள் யாவும் திகதி வாரியாக தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஏனையவற்றில் தவற விடப்பட்ட அல்லது தவறுதலாக (அச்சேற்றும்போது) குறிப்பிடப் பட்ட தகவல்கள், நிகழ்வுகள் போன்ற விபரங்களைத் திருத்தி இக் குறிப்பு அமைகிறது. இவை முழுவதும் சரியென ஒத்துக் கொள்ள முடி யாது. இவற்றிலும் பிழைகள் இருக்க வாய்ப்புண்டு அவற்றை வாசிப்பதிலும் முக்கியமாக நூலகத்தில் அக்கறையுடையவர்கள் - விபரம் தெரிந்தவர்கள் திருத்த வேண்டியது கடமையென நான் கருதுகிறேன். மேலதிகமாக இத்தொகுப்பில் இடம்பெறாத நூலகம் பற்றிய தகவல்களைத் தெரிந்தவர்கள் ஆவணப்படுத்தலுக்காக எனக்குத்தந்துதவும்படியும் தயவாக கேட்டுக்கொள்கின்றேன். (9 ஆவதாகக் குறிப்பிடப்பட்ட ஒரு வரலாற்றுக் குற்றம் என்ற நூல் சுவிற்சர்லாந்தில் நான் இருந்தவேளை எனக்குக் கிடைத்தது. அது ஒருபக்கச் சார்பாக பிழையாக எழுதப்பட்டதென்பதால் அதுபற்றி இங்கு எதுவும் குறிப்பிடவில்லை- தனியாக விரிவாக அதுபற்றி பின்னர் எழுதலாம் என்றிருக்கிறேன்)

நூலகம் எரிக்கப்பட்ட அன்றே அதாவது 01.06.1981 திங்கட்கிழமை இரவே ஈழநாடு பத்திரிகையும் எரிக்கப்பட்டது. ஒரேயொரு குடாநாட்டுப் பத்திரிகை எரிக்கப்பட்டதன்பின் செய்திகள் எதுவும் குடாநாட்டிலிருந்து வெளிவரவில்லை. செய்திகள் கொழும்புக்கும் ஏனைய வெளிநாடு களுக்கும் அறிவிக்கப்பட்டு அங்கிருந்தே பின் எமக்கு கிடைத்தன. குறிப்பாக அகில இந்திய வானொலி, வெரித்தாஸ், பிபிசி இவற்றையே மக்கள் கேட்டுச் செய்திகளை அறிய முடிந்தது. மேலும் அவசரகால நிலையும், ஊரடங்குச் சட்டமும் அந்த வேளை பிரகடனப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஈழநாடு முற்றுமுழுதாக எரிக்கப்பட்டபின் 4 நாட்களில் 6.6.1981ல் மீளவெளிவந்தததையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்த மானதாகும்.

பொதுநூலகம் எரிக்கப்பட்டபோதும், அதன்பின் யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களின் பின்பும், கிழக்குவாசல் முன்புறத்தில் பதிக்கப்பட்டிருந்த அனைத்து வெள்ளைக் கற்களும் (கரிபிடித்து - வெடித்து குண்டுகளினால் சேதமடைந்திருந்ததால்) அகற்றப்பட்டு புதிய கறுப்புக் கற்களாக மாற்றப்பட்டன. நூலகம் எரிக்கப்பட்டதற்கான எந்தவிதமான ஆதாரங்களையும் இல்லாமல் செய்வதும் ஒருகாரணமாக இருக்கலாம். 29.03.1954இல் ஜவரால் அடிக்கல் நாட்டப்பட்ட நினைவுக்கற்களில் ஒன்று வாசலில் இருந்தது. கட்டடத்திற்கு வெளியே 4 நினைவுக்கற்கள் இன்றும் யுத்தவடுக்களோடு காணப்பட்டாலும் வண. பிதா. லோங் அவர்களின் நினைவுக்கல் மாற்றப்பட்டுள்ளது. அவரது சிலையிலிருந்த

சேதமடைந்த பழையகல்லும் புதிதாக மாற்றப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் என்னால் எழுதப்பட்ட "யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட 33 ஆவது ஆண்டு நிறைவு இன்று(01.06.2014)" கட்டுரையில் இந்த விபரங் களைத் தெரிவித்திருந்ததன் பலனாக தற்போது அந்தக் கல்லை சிலை யின் பிறிதொருபக்கத்தில் மீண்டும் பொருத்தப் போவதாகத் தகவல். எம்மவர்களும் இருக்கின்ற பழைய ஆதாரங்களை இல்லாமல் செய்ய முனைவதுதான் வேதனைக்குரிய விடயம்.

நூலகத்தின் சரித்திரத்தில் அத்திவாரமிடப்பட்டபோதும் சரி, திறந்து வைக்கப்பட்டபோதும் சரி, அனைத்து நினைவுக் கற்களும் ஆங்கிலத்திலேயே இருந்திருக்கிறது. 1981 எரிக்கப்பட்ட பின் கட்டப் பட்ட பின்புறப்பகுதியின் வாசலில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டு கற்கள் பதிக்கப்பட்டன. ஒன்று 07.02.1982இல் அடிக்கல் நாட்டியது மற்றயது 04.06.1984 இல் திறக்கப்பட்டது. எனவே அமெரிக்கரின் நன்கொடைப் பணம் பற்றி மூதறிஞர் க.சி. குலரத்தினம் அவர்களது நூலில் 88ஆம் பக்கத் தில் 3ஆவது பந்தியில் குறிப்பிட்ட நினைவுக்கல் தமிழில் இருந்திருக்க முடியாது.

".....அனாதரவாக இயங்கிவந்த இந்நூலகத்தை நகர சபை பொறுப் பேற்று ...." என்று 1968 குடிசன சுகாதார மலரிலும், "...குறைந்த நிதியு டன் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகம் தொடர்ந்தும் தொழிற்பட முடியாமல் திணறிய வேளையில்...." என்று 1974 வெள்ளி விழா மலரிலும், குறிப் பிடப்பட்ட செய்திகள் நூலகத்தின் ஆரம்ப சரித்திரத்தை ஓரளவு வாசித்தறிந்த என்னால் ஏற்க முடியாதுள்ளது.



கட்டுரை எழுதுபவர்கள் தாம் எழுதும் அனைத்தும் சரியானது என்று தமது மனம்போன போக்கில் எழுது வதைத் தவிர்க்கவேண்டும். திரு.க.மு.செல்லப்பா அவர் களது சரித்திரத்தை முதலில் தெளிவாக வாசித்து அவர் எப்படியானவர் - அவர் எந்த நோக்கத்திற்காக இந்தப் பணியை முன்னெடுத்தார் என்பதை அறிந்து எழுதியிருக்கவேண்டும்.

அவர் விரும்பியிருந்தால் நூலகத்தை நகர சபைக்கு கையளிக்கும் பிரேரணையையே தவிர்த்து தனித்து இயங்க வைத்திருக்கலாம்.

இதேபோல ஏப்ரல் 2009 இல் தமிழில் வெளியான திரு. வி.எஸ். துரைராஜா அவர்களின் நூலிலும் கொழும்பு நிர்வாகக் குழுவினர் புகழ்

பெற்ற இந்திய பரதநாட்டிய பேரொளி சுவர்ணமுகி அவர்களைக் கொண்டு கொழும்பில் நடன நிகழ்ச்சியை மேலதிகமாக நடத்தினர் என்று (பக்கம் 44) குறிப்பிட்டு யாழ்ப்பாண நிகழ்வுகளைத் தவிர்த்தமை வேதனையை அளிக்கிறது. தனக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்த திறப்பு விழா நிகழ்வுகளைப் பற்றியும் குறிப்பிடவில்லை.

**நூலக சேதங்கள்**

01.06.1981 நூலகம் எரிக்கப்பட்ட பின்னர் 3 தடவைகள் அது பாரிய சேதத்திற்கு உள்ளாகியிருக்கிறது

1. 1985இல் மே மாதம் 9,10,11 என 3 திகதிகளில் சம்பவங்கள் இடம்பெற்றதாக தகவல்கள் சொல்கின்றன.

    - சோமீதரனின் எரியும் நினைவுகள் ஆவணப்படத்தில் முன்னைய நூலகர் சுலோச்சனா ரகுநாதன் கருத்துத் தெரிவிக்கையில் 9.5.1985 ரொக்கட் லோஞ்சருடன் வந்த இளைஞரொருவரால் கோட்டை தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொண்ட பொழுது தான் ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானத்துடன் தொடர்பு கொண்டு நூலகத்தினுள் மாணவர்கள் படித்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களை வெளியேற்ற வேண்டுமெனவும் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆணையாளர் இராணுவ கொமாண்டருடன் தொடர்பு கொண்டு விபரத்தைத் தெரிவித்த சமயத்தில் உடனடியாக அனைவரையும் அவ்விடத்தைவிட்டு வெளியேறும்படி கூறியதைத் தொடர்ந்து நூலகத்தினுள் இருந்த ஏறக்குறைய 80பேர் வரையில் வெளியேறிய பொழுது கிட்டத்தட்ட மாலை 4.30 மணியாக இருக்கும் எனவும் பின்னர் அன்றிரவு சுமார் 9.30 மணியளவில் பாரிய குண்டுச்சத்தம் கேட்டதாகவும் தெரிவிக்கிறார்.

    - 1985.05.10 அரச படையினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது என 2010 ஜூலையில் திரு. சி.வீ.கே. சிவஞானத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இச்செய்தி எனது கிருத்தியத்தில் 6.7.2010 திகதியில் "நினைவுக்கல்லில் குறிப்பிடப்பட்ட திகதியில் யாழ்.பொது நூலகம் திறக்கப்படவில்லை முன்னாள் ஆணையாளர் தெரிவிக்கிறார் - உதயன் செய்தி" என்று பதியப்பட்டுள்ளது.

    - 11 ஆந் திகதி நூலகம் தகர்க்கப்பட்ட செய்தி 12 ஆந் திகதி ஈழமுரசில் பிரசுரமாகியிருக்கிறது!

2. 04.08.1986 இல் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல் களினால் நூலகக்கட்டிடத்தில் பாரிய சேதம் ஏற்பட்டதை அடுத்த நாள் (25.08.1986) ஈழமுரசு "யாழ் நூலகமும் சேதம் - நகரம் நேற்றிரவு முழுவதும் இருளில்" என்று செய்தி வெளியிட்டது.

3. 15.05.1987இல் எரிக்கப்பட்டது இதனை - யாழ் பொது நூலகம் எரிந்தது - என்று 17.05.1987 வார முரசொலி பத்திரிகை செய்தி வெளியிட்டது.

அரசியல் மாத்திரமல்ல சமயமும் நூலக வரலாற்றில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது என்பதை சரஸ்வதி சிலை பிரச்சினை தெளிவாக சொல்லுகிறது. முதலில் வைக்கப்பட்ட சரஸ்வதி சிலை அகற்றப்பட்டு யாழ். நங்கையின் சிலை வைக்கப்பட்டு பின்பு அது அகற்றப்பட்டு திரும்ப சரஸ்வதியின் சிலை வைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இதுபற்றி இரு கட்டுரைகளில் மாத்திரம் செய்திகள் உள்ளன.

1. திரு. என். செல்வராஜா அவர்களின் நூலில் "நூலகர் நெஞ்சை விட்ட கலா நினைவலைகள்" முன்னாள் பிரதம நூலகர் கலாநிதி வே. இ. பாக்கியநாதன் அவர்களின் கட்டுரையில் 113 ஆம் பக்கத்தில் "நூலகராகிய எனக்கு ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நிறுவப்பட்ட சரஸ்வதி சிலை சில விஷமிகளால் நூலகத்திலிருந்து பெயர்க்கப்பட்டு சுப்பிரமணியம் பூங்காவில் எறியப்பட்டது. இச்சிலை பின்னர் அங்கு மீண்டும் நிலை நிறுத்தப் பட்டது. அதேபோல் வேறொரு சரஸ்வதி சிலை நூலக முகப்பில் இன்றும் காட்சியளிக்கின்றது" என்றிருக்கிறது! இதில் அவரும் சிலையை சரஸ்வதி என்றே சொல்கிறார். ஆனால் அது சரஸ்வதியின் சிலை அல்ல. யாழை மீட்டும் ஒரு மங்கை! அவர் குறிப்பிட்ட சிலை இன்றும் சுப்பிரமணியம் பூங்காவினுள் தண்ணீர்த் தொட்டியினுள் இருக்கிறது.

கடந்த 3 வருடங்களுக்குள் இரண்டு யாழ் நங்கையின் சிலைகள் புதிதாக வைக்கப்பட்டிருப்பதையும் இங்கு பதிவிட விரும்புகிறேன். ஒன்று பண்ணைச் சந்தியில் கடந்த 18.06.2012ல் மறைந்த முதல்வர் அல்பிரட் துரையப்பா குடும்பத்தவர்கள் ஒரு சிலையை நிறுவி அதற்கு துரையப்பா ஞாபகார்த்த சுற்று வட்டம் என்று பெயர்சூட்டி அதில் அவரது பதவிக்கால நினைவுக் கல் ஒன்றையும் நாட்டி வைத்திருக்கிறார்கள். மற்றையது எமது மாநகர சபை வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

2. 09.04.2000 ஞாயிறு தினக்குரல் கட்டுரை. அதே நூலில் பக்கம்100இல் 2 ஆவது பந்தியில் 6ஆவது வரியில் - கவினுறு யாழ் அன்னை யாழில் இன்னிசையை மீட்டிடும் அழகிய முகப்புத் தோற்றத்துடன் நின்ற எம் அறிவாலயம் என்றுள்ளது - இவை யாழ் அன்னையின் சிலை நூலக முகப்பில் இருந்தமைக்கான சான்றுகள்.

பிரச்சினைக்காக இதை நான் குறிப்பிடவில்லை. வேறு யாராவது பின் எழுதுபவர்கள் குறிப்பிடமுதல் இது ஏற்கனவே நடந்த ஒரு பிரச்சினை என்பதைச் சுட்டிக் காட்டவே குறிப்பிட்டேன்.

மேலும் உத்தியோகத்தர் தெரிவு கண்ணியமாகவும், பரந்த அடிப்படை யிலும் நடைபெற்றது. தலைவராக அன்றைய மாவட்ட நீதவான் சி. குமாரசுவாமி அவர்கள், உப தலைவராக வண.கலாநிதி ரி. ஐசாக் தம்பையா அவர்கள் இணைச் செயலாளராக அப்புக்காத்தர் சி. பொன்னம்பலம் அவர்களும் சக்கடத்தார் க.மு. செல்லப்பா அவர்களும் தெரிவாகினார்கள் என்று மூதறிஞர் க.சி. குலரத்தினம் அவர்களுடைய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது திரு. வி.எஸ். துரைராஜாவின் ஆவணத்திலும் உள்ளது. ஆனால் தலைவராக சிலர் உப தலைவரைக் குறிப்பிட்டுள்ள விபரம் இந்தத் தொகுப்பில் பதியப்பட்டுள்ளது.

சேதமடைந்த நூல் நிலையம் சந்திரிகா அரசினால் மீள புனரமைக் கப்பட்டு 14.02.2003ஆம் திகதி திறக்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு அதற்கான அழைப்பிதழ்களும் அச்சிடப்பட்ட நிலையில் 12ஆந்திகதி நூல் நிலையத்தை திறக்கக்கூடாது என கோரிக்கைகள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து 13 ஆந்திகதி நடைபெற்ற விசேட கூட்டத் தில் உறுப்பினர்கள் பதவி விலகியதுடன் நூல்நிலையத் திறப்பு விழா வும் இரத்துச் செய்யப்பட்டது! 13ஆந்திகதி நள்ளிரவு நூலகத் திறப்புக்களும் காவலாளிகளிடமிருந்து அபகரிக்கப்பட்டன. 2003.02.14 பத்திரி கைகள் அனைத்திலும் நூலகத் திறப்பு விழா ரத்து என்றும், மேயரும் உறுப்பினர்களும் பதவி துறப்பு என்ற செய்திகள் வந்தபின் - மிக முக்கியமான வரலாற்றுத் தவறாக நூல் நிலையத்தின் பிரதான வாசலில் மும்மொழிகளில் காணப்படும் 14.02.2003 இல் நூலகம் திறக்கப்பட்ட செய்தியையுடைய நினைவுக்கல் (7 வருடங்களின் பின் 2010 இல் பொருத்தப்பட்டது) பொய்யான செய்தி. வரலாற்றை ஆராய மூலமாக இருக்கும் நூலகத்தில் பிழையான பதிவு இருப்பது சரியா? இது உடன டியாக அகற்றப்பட வேண்டும்.

**"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"**

## 04.06.1984 நடைபெற்ற நூலகத்திறப்பு விழா

**(தினபதி, வீரகேசரி, தினகரன் பத்திரிகைச் செய்திகளின் தொகுப்பு)**

இந்த விடயம் மூதறிஞர் ஐயாவின் நூலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஏனைய நூல்களில் ஒரு வரியில் சொல்லப்பட்டிருக்கிறது. சோமீதரனின் ஆவணப்படத்திலும் ஒரு படத்துடன் அந்த நிகழ்வு நிறைவு பெறுகிறது.



1981 ஜுன் முதலாம் திகதி இரவு எரிக்கப்பட்ட யாழ்.நூலகத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா 1984 ஜுன் 4 ஆந்திகதி காலையில் மாநகர ஆணையாளர் திரு. சீ.வீ.கே.சிவஞானம் அவர்களது தலைமையில் ஆரம்பமானது. பிரதம விருந்தினர் திரு. அமிர்தலிங்கத்தை நூலக வாயிலிலிருந்து திரு.சிவஞானம் மற்றும் நூலகக்குழு உறுப்பினர்கள், பகுதித்தலைவர்கள் ஆகியோர் நூலக மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் ஆயர் அதி.வண. கலாநிதி. வ.தியோகுப் பிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசந்துறைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.அ.அமிர்தலிங்கம் பிரதான மண்டபத்தின் வாயிலில் நாடாவை வெட்டி திறப்பு விழாவை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம் தமிழ்த்தாய் வணக்கம் பாடினார். நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அதி, வண, ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை, அல்ஹாஜ் மீரான் மொகிதீன் ஆலிம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.




இதன்பின்னர் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு.அ. அமிர்தலிங்கம் பேசினார். பிரதம அதிதியின் பேச்சைத் தொடர்ந்து விழா நினைவு மலர்


விழா நினைவு மலர் வெளியிடப்பட்டது. நூலகக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் பேராசிரியர் கு. நேசையா, கூட்டணித் தலைவர் திரு. மு.சிவசிதம்பரத்துக்கு முதலாவது மலரை வழங்கி வெளியிட்டு வைத்தார். இதனைத் தொடர்ந்து நூலக வரை படத்தை இலவசமாக வரைந்துதவிய கட்டிடக்கலைஞர் திரு.வி.எஸ். துரைராசாவுக்கு திரு.அ.அமிர்தலிங்கம் தங்கப்பதக்கம் சூட்டினார்.


வேலை செய்த முஸ்லிம் பெண்ணை அதிர்ச்சிக்குள்ளாக்கிய தந்தி

கட்டிடத்தை துரிதகதியில் கட்டிமுடித்த கட்டிட ஒப்பந்தக்காரர் திரு. ஜெயராசாவுக்கு திரு.அ.அமிர்தலிங்கம் பொன்னாடை அணிவித்து பாராட்டினார். இறுதியாக நூலகத்துக்கு அறிஞர்கள் எழுதிய நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு.சு. வித்தியானந்தன், கலாநிதி. வண. குலேந்திரராசா, பேராசிரியர் கு. நேசையா ஆகியோரது நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இறுதியாக யாழ் மாநகர ஆணையாளர் திரு. சீ.வி.கே. சிவஞானம் நன்றி உரை நிகழ்த்தினார்.

### அமரர் வி. ஆர். வடிவேற்கரசன் அவர்கள்



நூல்நிலையம் எரிக்கப்பட்ட பின்னர் நூலகத்தை மீளக்கட்டியெழுப்ப உழைத்தவர்கள் பலரில் மிக முக்கியமான ஒருவர் நூலகம் எரிக்கப்பட்ட அதே நாளில் (கடந்த 01.06.2013) மரணமடைந்ததும் ஒரு வரலாறாகப் பதியப்பட வேண்டியுள்ளது. "யாழ்ப்பாண பொதுசன நூலக புனரமைப்புத்திட்டக் கொழும்புக்குழு" ஏற்படுத்தப்பட்ட வேளையில் அதில் தன்னையும் இணைத்து அளப்பரிய பங்காற்றிய பெருமையும் கொழும்பில் நூலகவாரம் நடத்தியதற்கு மேலாக தமிழ்நாட்டு அரச நர்த்தகியான செல்வி. சுவர்ணமுகி அவர்களின் குழுவினரை இலங்கைக்கு வரவழைத்து தலைநகர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடன நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்த பெருமையும் அமரத்துவம் அடைந்த திரு. வடிவேற்கரசனுக்கு உண்டு.

**யாழ்.நூலக கட்டிடநிதிக்கு தமிழக நர்த்தகி சுவர்ணமுகியின் நடனநிகழ்ச்சி – வடிவேற்கரசன் தகவல் (5.7.87 வீரகேசரி)**

யாழ்.பொது நூலகக் கட்டிடநிதிக்கென நடன நிகழ்ச்சிகளை நடத்துவதற்குகென தமிழகத்தின் ஆஸ்தான நர்த்தகி சுவர்ணமுகி இம்மாதம் 15ஆம் திகதி இலங்கைவர இருப்பதாக பிரபலவர்த்தகரான திரு.வி.ஆர். வடிவேற்கரசன் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது இவருடன் சட்டத்தரணி எஸ்.ரவீந்திரனும் கலந்து கொண்டார். கொழும்பில் இயங்கிவரும் யாழ். பொதுநூலக புனரமைப்புக் குழுசார்பில் இம்மாநாடு நடைபெற்றது. அப்போது திரு.வி.ஆர். வடிவேற்கரசன் மேலும் குறிப்பிட்டதாவது "எமதுகுழுவில் என்னுடன் கட்டடக் கலைஞர் திரு.வி.எஸ். துரைராஜா, சட்டத்தரணிகள் எஸ். ரவீந்திரன், கந்தசாமி ஆகியோர் இடம்பெறுகின்றனர். அண்மையில் யாழ்.பொதுநூலக வாரத்தை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து ஐந்து இலட்சம்ரூபாவும் சுமார் 30 ஆயிரம் நூல்களும் சேகரிக்கப்பட்டன. யாழ்நூலகத்தைக் கட்டிமுடிப்பதற்கு மொத்தம் 15 கோடி ரூபா தேவைப்படுகிறது. இதற்கென ஜனாதிபதி 9 இலட்சம் ரூபா நிதியுதவி தந்துள்ளார். ஜனாதிபதி நிதியிலும் பணம் சேர்ந்து வருகிறது. யாழ்.மேயர் திரு.இராஜா விஸ்வநாதன் உலகளாவியரீதியில் பணமும் நூல்களும் சேகரித்து வருகிறார். இந்த நிதிக்கென எமக்கு இலவசமாக தமது நாட்டிய நிகழ்ச்சிகளை அளிப்பதற்கு தமிழக ஆஸ்தான நர்த்தகி குமாரி சுவர்ணமுகி நடனநிகழ்ச்சிகளை நடத்தித்தர ஒப்புதல் தெரிவித்துள்ளார். இவர் இம்மாதம் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இங்கு தங்குவார். இவருடன் இவரது தங்கையான புதியவாரப்புகள் ஒருதலைராகம் புகழ் உஷாவும் குழுவினரும் வருகிறார்கள். கொழும்பு பண்டாரநாயக மண்டபத்தில் இம்மாதம் 16ஆம் திகதி மாலை ஆறுமணிக்கும், யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 19ஆம்திகதிமாலை ஆறுமணிக்கும் இவரது நடனநிகழ்ச்சிகள் இடம்பெறும். கொழும்பு மாநகரசபை இந்நிகழ்ச்சிக்கு களியாட்டவரிவிலக்கு அளிக்கிறது. இந்த வசூல்தொகை யாழ்.நூலக கட்டிடநிதிக்கு கையளிக்கப்படும்." 22.07.1981 வீரகேசரியில் இதுபற்றிய செய்தி படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

**"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"**

## இந்திய தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்வு

14.02.2003இல் திட்டமிட்டபடி நூலகம் திறக்கப்படாததைத் தொடர்ந்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் நூல்நிலையத்திற்கு ஆயிரம் புத்தகங்கள் வழங்கி கௌரவிக்க ஒரு நிகழ்வை 24.03.2003இல் ஏற்பாடு செய்தது. இராஜினாமாச் செய்த அத்தனை உறுப்பினர்களையும் இந்நிகழ்வில் பங்குபற்றவும் ஏற்பாடுகள் செய்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்திருந்தது. இந்நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்த மகராஜ் அவர்களும் பங்குபற்றினார். இந்நிகழ்வின் பின் அடுத்த நாள் என்னால் உயர்ஸ்தானிகருக்கு அனுப்பப்பட்ட கடிதம்

**25.03.2003.**

அதிஉத்தம இந்திய ஸ்தானிகர் ஸ்ரீ நிரூபம் சென் அவர்களே!

தங்களுக்கு முதலில் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தக் கடிதத்தை எழுதத் தொடங்குகின்றேன்.

தாங்கள் - தங்கள் அரசு எனது கட்சியின் தலைவர், தனது பேச்சின் போது குறிப்பிட்டவாறு எமது தாய்நாட்டைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள். எமது மாநகரசபை நிர்வாகத்திற்குப் பொறுப்பாக ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சபையின் அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சம்பிரதாயத்தினை தாயின் ஸ்தானத்திலிருந்து அந்த சம்பவத்தை உயிரூட்டி எமக்கு நூலகத் திறப்புவிழா நடைபெற்றிருந்தால் ஏற்படும் மகிழ்வைக் காட்டிலும் கூடிய மனநிறைவை அளிக்கத்தக்கதாக நேற்றைய நிகழ்வை ஏற்படுத்தியமைக்கு எமதுசபையினர் சார்பாக, யாழ் மாநகரத்தில் நேர்மையையும் தர்மத்தையும் கைக்கொண்டு வாழும் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன். முதல்வர் அவர்கள் பேசுகையில் அவர் கண்ணீர் சிந்தினார். அந்தநிகழ்வு முடிவடைந்ததும் இயற்கையும் கண்ணீர் சிந்தியது. நடப்பவை எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்பது ஆன்றோர்வாக்கு. தாங்கள் தங்கள் பேச்சின் போது மகாகவி பாரதியாரையும், சோமசுந்தரப்புலவர், துரையப்பாபிள்ளை போன்ற பலரையும் நினைவுபடுத்தியிருந்தீர்கள். நான் கல்வி கற்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைத் ஸ்தாபித்தவர் துரையப்பாபிள்ளை அவர்கள். எமது கல்லூரிக்கீதம் இந்தியநாட்டின் தேசியகீதத்தின்

மெட்டிலமைந்தது. இந்தியநாட்டின்மீதும் இந்திய தேசபிதா மகாத்மா மீதும் நான் உயிரையே வைத்திருப்பவன். காந்தி ஆங்கிலத் திரைப் படத்தை குறைந்தது 20 தடவைகளுக்கு மேல்பார்த்துவிட்டேன். தொடர்ந்தும் பார்க்க ஆவலாயுள்ளேன்.

எமதுகாலத்தில் (கடந்த 5 வருடங்களில்) இரண்டு முதல்வர்களையும் ஒரு உறுப்பினரையும் இழந்து மிகவும் ஒரு அசாதாரண நிலையில் பல்வேறு விமர்சனங்களக்கு மத்தியில் பலர் உயிருக்குப் பயந்து பதவிவிலகிய நேரத்தில் துணிந்து சபையை நடத்தியதுடன் அழிந்த நிலையிலிருந்த பொது நூலகத்தை மீளக்கட்டி எழுப்பப்பட்ட அந்தகாலத்தில் நாம் செய்த சேவை நியாயமானது என்ற அறத்தை மெய்ப்பித்த இந்திய அரசின் தீர்க்கதரிசனத்தை நாம் மனதாரப் போற்றுகின்றோம்.

பொதுநூலகத்தின் வரலாற்றில் இந்தியாவுக்கு முக்கியபங்குண்டு. 1952ம் ஆண்டில் டெல்லிப் பல்கலைக்கழகத்து நூலகர் பேராசிரியர் கலாநிதி எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து நூலக ஆரம்பப்பணிகளுக்கு கலந்துரையாடலைச் செய்தவர் வண. பாதிரியார் லோங் அடிகள். அதேபோல முற்றவெளியில் கட்டடம் கட்டுவதை இடம்பார்த்து ஆமோதித்தவர் தமிழ்நாட்டுக் கட்டடக்கலை நிபுணர் நரசிம்மன் அவர்கள். இவர்களுக்கு மேலாக 29.05.1954ல் நகரபிதா சாம். சபாபதி, வண. லோங்பிதா, பிரித்தானிய தூதுவர் செசில் சையேஸ், அமெரிக்கத் தூதுவர் பிலிப் குறோஸ், இந்தியத் தூதுவரின் முதற்காரியதரிசி சித்தார்த்தசாரி ஆகிய ஐவரும் அடிக்கல் நாட்டிவைத்ததும் இந்திய அரசின் நன்கொடையாக அன்றையதினம் ரூபா 10,000.00 அன்பளிப்புச் செய்யப்பட்டதும் வரலாறு.

அந்த அடிப்படையில் இன்றைய நூல்கள் வழங்கும் வைபவமும் வரலாறாகி விட்டது. எமது வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாக மனநிறைவை அளித்த விழாவாக இதை நான் நோக்குகின்றேன். 14.02.2003ல் திறக்கப்படவிருந்த நூலகத்திற்கு பங்காளியாக இருந்த எம்மை நேற்றையவிழாவில் முதன்மைப்படுத்தி கௌரவித்தமைக்காக எமது மனம் நிறைந்த நன்றிகளை மீண்டும் தெரிவித்து இதனை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

**வணக்கம்.**

**என்றும் உண்மையுள்ள,**
**தங்க. முகுந்தன்**
**முன்னாள் மாநகரசபை உறுப்பினன்**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு 1.** யாழ் பொது நூலகத்துக்கு பல அரியநூல்களை அன்பளிப்பாக வழங்க முதல்வர் எம்.ஜி.ஆர் ஏற்பாடு(ஈழநாடு 12.10.1981)

2. From India With Love (Saturday Review Sri Lanka 1985-7-6)
3. யாழ் நூலகத்துக்கு இந்திய மத்திய, தமிழக அரசு நூல்கள்அன்பளிப்பு (வீரகேசரி 18.01.1998)

**மறைந்த திரு. அல்பிரட் துரையப்பா அவர்கள் (15.06.1926 – 27.07.1975)**

பிரதி முதல்வராக 11.1.1952 - 31.12.1954 வரையிருந்தவர் (இது வெள்ளி விழாமலரில் பதிவிடப் பட்டு உள்ளது). அவரது விபரங்களை இணையத்தில் (Wikipedia) தேடியபொழுது 12ஆவது முதல்வராக



15.02.1970 - 27.07. 1975 வரையும் 1960 - 1965 வரை பாராளுமன்ற உறுப்பினர் ஆகவும் 23 வயதில் பிரதி முதல்வராக இருந்தவர் என்றும் உள்ளது. (இவற்றில் தவறுகள் இருக்கிறது) 6ஆவது முதல்வராக சேவை ஆற்றிய அவரது 11.08.1958 27.06.1960 காலப்பகுதியில்தான் நூலகத்தின் ஒரு பகுதியை கட்டிமுடித்து 11.10.1959இல் திறப்பு விழா செய்தார். இது பதிவில் இல்லை. (அப்போது அவருக்கு 33 வயது)

> **"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
> **தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"**

## யாழ்ப்பாணத்தில் நூலகவாரமும் கொடிதினமும்

1981 பெப்ரவரி 22 திங்கள்முதல் 28 ஞாயிறு வரை நூலக வாரமும் கொடிதினமும் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. மாநகர சபைமுன்றலில் மேயர் திரு.இராசா விஸ்வநாதன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. முதல் கொடியை எதிர்க்கட்சித்தலைவர்



திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களுக்கு வழங்கிய நிகழ்வில் பொது நூலகத்தை கட்டி முடித்து மீண்டும் பூத்துக் குலுங்க வைப்பது தமிழர்களின் தலையாய கடமை எனவும், தீ மூட்டி எரித்தவர்கள் பார்த்துப் பிரமிக்கத்தக்க வகையில் புதிதாகக் கட்டப்படும் நூல் நிலையம் அமையவேண்டும் எனவும் தனது பேச்சின்போது குறிப்பிட்டார். நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. பிரான்சிஸ் அடிகளார் யாழ் நகரின் அறிவுக்களஞ்சியமும் கலைக்கூடமுமாகிய நூல் நிலையத்திற்கு ஏற்பட்டநிலை தமிழ்மக்கள் மனதில் நீக்கமுடியாத கறையை ஏற்படுத்தியுள்ளது. நூல்நிலையத்திற்குஇடப்பட்டதீ தமிழ்மகன் ஒவ்வொருவரினதும் அறிவையும் அழிப்பதற்கு இடப்பட்டதாகும்.

இந்நிலையில் எங்கள் நூல்நிலையத்தை பன்மடங்கு பெரிதாகக் கட்டி எழுப்புவது எங்கள் கடமையாகும். இதனை செயற்படுத்தும் நோக்குடனேயே முதற்கட்டமாக இந்தக் கொடிதினத்தையும் ஒழுங்கு செய்துள்ளோம். இம்முதல் கொடியை எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பெறுவது மிகவும் பொருத்தமானதாகும். நூல் நிலையம் தாங்கிய கொடியை உங்கள் இதயத்திற்கு மிக அண்மையில் அணிந்து கொண்டிருக்கிறீர்கள். இது நூல் நிலையத்தில் நீங்கள் கொண்டுள்ள பற்றைக் காட்டுகிறது. ஆனால் இதற்கு மேலாக நூல் நிலையமானது உங்கள் இதயத்தில் நிலையான நீங்காத மங்காத இடத்தைப் பெறவேண்டும். எவ்வாறு அன்று நூல்நிலையம் தீயிட்டபோது அமைதி இழந்து பதட்டமடைந்த நிலையில் காணப்பட்டபோது உங்கள் உள்ளத்தில் எழுந்த ஓர் எண்ணம் எங்கள் நூல் நிலையம் கட்டி எழுப்பப்படவேண்டும் என்பதே அன்று உங்கள் உள்ளத்தில் எழுந்த தீ இன்னும் தணியவில்லை என்பதைக் காண்கிறேன். என்றும் அது தணியாமல் இருக்கட்டும் என்று கூறினார்.

## திருத்தங்கள் பற்றி

**1968 சுகாதார மலரில்** யாழ்ப்பாண பொது சனநூலகம் வே.க. பாக்கியநாதன் (நூலகப் பொறுப்பாளர்) கட்டுரையில் முதற் பந்தியில் 6ஆவது வரியில் "அவரது அசையாத நம்பிக்கையையும், சளையாத உழைப்பையும் கண்டு .........நூலகம் நிறுவ வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்" என்றிருப்பது தவறு. கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் திரு. க. மு. செல்லப்பா அவர்கள்! கூட்டத்தில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரே மாவட்ட நீதிபதி திரு. சி.குமாரசுவாமி.

8 ஆவது வரியில் 1936 என்றிருப்பது தவறு 1934

3ஆவது பந்தியில் 20 ஆவது வரியில் திரு. வி.எம். நரசிம்மராவ் என்றிருப்பது தவறு திரு. வி.எம். நரசிம்மன்.

இக்கட்டுரையில் அமெரிக்கப் பகுதி, சிறுவரி பிரிவு என்பன குறிப்பிடப்பட்டுள்ளமையால் 1967இல் இரண்டும் திறக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

**1974 வெள்ளி விழா மலரில்** பக்கங்களின் இலக்கமின்மையால் கட்டுரையின் முதற் பக்க முதற் பந்தியில் 9 ஆவது வரியில் தலைவராக ஐசாக் தம்பையா என்றும், இரண்டாம் பக்க இரண்டாம் பந்தியில் 3ஆவது வரியில் முன்னாள் மேயரும் என்றிருப்பது தவறு. மேலும் இதில் பிரித்தானியத் தூதுவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

**1984 மீள்விக்கப்பெற்ற கட்டடத் திறப்பு விழா மலரில்** 59ஆம் பக்கத்தில் க.சி.குலரத்தினம் அவர்களது கட்டுரையில் அடிக்கல் நாட்டு விழா என்ற பகுதியில் 2ஆவது பந்தியில் 5ஆவது வரியில் 29.5.54 என்பது 29.3.54 என்று திருத்தப்படவேண்டும்.

**பொன்விழா மலரில்** (இதிலும் பக்கங்களின் இலக்கம் இடப்படவில்லை)யாழ் நூலகம் - இரு வீரத் துறவிகள் என்ற திரு. பிரான்சிஸ் சென் றோச் அவர்களின் கட்டுரையில் நூலகத்திற்கு 1954.03.29 இல் பிதா லோங் அடிகளினால் அடிக்கல் நாட்டப்பட்டது என்று இரு இடங்களில் அவரை மட்டும் குறிப்பிட்டுள்ளார். ஏனைய நால்வரின் பெயர்கள் பதியப்பட வில்லை இவரது கட்டுரையிலும் ஐசாக் தம்பையா அவர்கள் தலைவராக இருந்தார் எனக் குறிப்பிடப்படுகிறது.

**யாழ்ப்பாண நூல் நிலையம் ஓர் ஆவணம் மூதறிஞர் க.சி.குலரத்தினம் அவர்களின் நூலில்** திரு.க.மு.செல்லப்பா அவர்கள் அச்சுவேலியைச் சேர்ந்தவர் என பதிவிட்டிருப்பதால் பின் வந்த அனைவரும் அதையே நம்பி தமது கட்டுரைகளிலும் பதிவிட்டிருக்கிறார்கள். குறிப்பாக செல்வராஜா

அவர்களின் நூலில் 91ஆம் பக்கத்தில் 2 ஆவது பந்தியிலும், 99ஆம் பக்கத்தில் 3ஆவது பந்தியிலும் அச்சுவேலி என்றுள்ளது. அவர் புத்தூரைச் சேர்ந்தவர் என அவரது குடும்பத்தவர்களுடன் தொடர்பு கொண்டு அறிய முடிந்தது.

அத்தியாயம் 8 இருநூலகங்களின் சங்கமம் என்ற பகுதியில் அமெரிக்க தகவல் நூலகத்தைத் திறந்து வைத்த விமர்சனத்தை மிக அருமையாக மூதறிஞர் ஐயா அவர்கள் வர்ணித்திருப்பினும் திகதி குறிப்பிடப்பட வில்லை. அதேபோல அத்தியாயம் 9இல் சிறுவர் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட திகதியும் குறிப்பிடப்படவில்லை.

**திரு.வி.எஸ்.துரைராஜா அவர்களின் யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகிறது என்ற ஆவண நூலில்** 27ஆம் பக்கத்தில் 4. அமெரிக்கப்பிரிவு என்ற பகுதியிலும் திகதி குறிப்பிடவில்லை.

28ஆம் பக்கத்தில் சிறுவர் பிரிவு 1976 நவம்பர் 3ஆம் தேதி இந்தப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது என்றுள்ளது. இது தவறு 1967.11.03.

29ஆம் பக்கத்தில் 3 ஆவது பந்தியில் ஜூன் 1 ஆம் தேதியன்று சுமார் காலை 10.00 மணியளவில் இந்த மனிதர்கள் நூலகக்கட்டடத்துள் புகுந்து.... என்று இருப்பது தவறு இரவு 10.00 மணியளவில்.

88ஆம் பக்கத்தில் புத்துயிர் பெற்ற யாழ் நூலகம் என்ற நூலகரின் செய்தியில் பல அரசியல் சர்ச்சைகளின் பின்னர் 1981ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட யாழ் நூலகம் 23.2.2004ஆம் திகதி மீளவும் மக்கள் பயன்பாட்டுக்கு விடப்பட்டது. இது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். ஏனெனில் நூலகம் 1982 1983 பகுதிகளில் இயங்கி வந்ததும் 1984 இல் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டதும் வரலாறு.

நூலகம் திறக்கப்படக்கூடாது என்பதற்கு ஒரு காரணம் வேலைகள் பூர்த்தியடையவில்லை என்பதே! ஆனால் திரு.வி.எஸ்.துரைராஜா அவர்களது நூலில் ஜனவரி 2002இல் தமது வேலைகள் பூரணப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**திரு. செல்வராஜாவின் நூலில்** 22ஆம் பக்கத்தில் 4ஆம் பந்தியில் 9ஆவது வரியில் 1953 என்றிருப்பதுதவறு 1954 எனமாற்றப்படவேண்டும்.

62ஆம் பக்கத்தில் 6ஆவது பந்தியில் 4ஆவது வரியில் ஜூன் 5 தவறு ஜூன் 4(தேர்தல் நடைபெற்ற நாள்) அதே பக்கத்தில் இறுதிப் பந்தியில் தாவீது அடிகள் துயரத்துடன் சில நாட்களில் மரணமானார் என்பதும் தவறு.

67ஆம் பக்கத்தில் ஆங்கிலத்தில் ஐசாக் தம்பையா தலைவராக தெரிவு

செய்யப்பட்டார் என்றிருப்பதும் தவறு. (Issac Thambiah, who was the High Court Judge of Jaffna at that time, was elected Chairman) Vice Chairman ஆக திருத்தப்பட வேண்டும்.

68ஆம் பக்கத்தில் March 29 1953 என்றிருப்பதும் தவறு March 29 1954. இறுதிப் பந்தியில் 2ஆவது வரியில் Completion by June 1983 என்றிருப்பது 1984 ஆக திருத்தப்பட வேண்டும்.

79ஆம் பக்கத்தில் 5ஆவது பந்தியில் 6ஆவது வரியில் மார்ச் 4 தவறு மார்ச் 29.

92ஆம் பக்கத்தில் 2ஆம் பந்தியில் 4ஆவது வரியில் 31.05.1981 இரவுசிங்களக் காடையர் கும்பலினால் தீக்கிரையாக்கப்பட்டது என்பதில் 01.06.1981 என திருத்தம் செய்யப்படவேண்டும்.

99ஆம் பக்கத்தில் 3ஆவது பந்தியில் கலாநிதி ஐசாக் தம்பையாவும் இணைந்து என்பது தவறு - கூட்டத்தினை ஏற்பாடு செய்து அழைப்பு விடுத்தவர் ஒருவர். அவர் திரு. க.மு. செல்லப்பா மட்டுமே.

100இல் 3ஆவது பந்தியில் 1981 ஜுன் மாதமுதல்நாளின் விடிகாலை வேளை மே 31 ஆம் திகதியில் நள்ளிரவில் என்றிருப்பது தவறு. ஜுன் 1ஆம் திகதி நள்ளிரவு என திருத்தப்பட வேண்டும்.

102ஆம் பக்கத்தில் யாழ் பொதுநூலகம் 31.05.1981 அன்று இரவு சிங்கள காடையர்களாலும் அரசபடையினராலும் எரியூட்டப்பட்டது என்பதும் தவறு 01.06.1981

103 ஆம் பக்கத்தில் இரண்டாவதுபந்தியில் 29.05.1954 என்பதுபிழை 29.03.1954

104 ஆம் பக்கத்தில் இறுதிப் பந்தியில் 1981 மார்ச் 31 தவறு மே 31 என மாற்றப்பட வேண்டும்.

106ஆம் பக்கத்தில் இறுதிப்பந்தியில் 2ஆவது வரியில் 1981 மே 31ம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்டது. தவறு ஜுன் 1ஆம் திகதி

110ஆம் பக்கத்தில் இறுதிப்பந்தியில் 1955இல் அத்திவாரம் இட்டு என்பதும் பிழை 1954

116ஆம் பக்கத்தில் இறுதிப் பந்தியில் 5ஆவது வரியில் 1981 மே 31 நள்ளிரவு என்றிருப்பதும் தவறு ஜுன் 1 என திருத்தப்படவேண்டும்!

**தீ தின்ற தமிழர் தேட்டம் – யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதைத் தொகுப்பு – என். செல்வராஜா (தொகுப்பாசிரியர்) அயோத்தி நூலக சேவைகள் வெளியீட்டில்** அறிமுகக் குறிப்பில் 10ஆம் பக்கத்தில் இரண்டாவது பந்தியில் 1981 மே 31 இன் நள்ளிரவுக்குப் பின்னர் என்றும் இறுதியில் எரிப்பதால்

வரலாற்றை திருத்தி எழுத முடியுமா என்ற தலைப்பின் கீழ் 108 ஆம் பக்கத்தில் 1981 மே 31ம் திகதி என்றும்,
அறிமுகத்தில் மாதவி சிவலீலன் 13ஆம் பக்கத்தில் 2ஆவது பந்தியில் 3ஆவது வரியில் மே 31ம் திகதி நள்ளிரவு என்றும்,
கவிதைகளில்
27ஆம் பக்கத்தில் 4ஆவது வரியில் ஆண்டு ஐம்பத்து மூன்றின் என்றும்,
53ஆம் பக்கத்தில் 8ஆவது வரியில் 81 மே மாதம் 31இல் நள்ளிரவு நேரம் என்றும்,
90ஆம் பக்கத்தில் 22ஆவது வரியில் 1981ன் மே 30ம் நாளில் என்றும் இருப்பவை தவறானதாகும்.

## தகவலுக்காக சில செய்திகள்

**அமுது சஞ்சிகையின் ஊற்று 1 துளி 6 மார்ச் 99 இதழில்** அரசியலரங்கம் - யாழ்ப்பாண தேர்தல்.... தமிழனின் மூளைக்கு வைத்த தீ, தேர்தல் கொள்ளை நேரடி நாட்சியம் - ஒரு சிங்கள தேர்தல் அதிகாரி என்ற இரு கட்டுரைகளும் 1981இல் நடந்த நிகழ்வை விபரிக்கின்றன.

**16.06.1981 வீரகேசரி** யாழ். பொதுநூலகத்தை எரித்தது காட்டுமிராண்டிச் செயல் - வாசுதேவ நாணயக்கார, கூட்டணி எம்.பி.களின் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு.

**17.06.1981 ஈழநாடு** தாவீது அடிகள் மற்றும் நால்வர் ஆத்மசாந்திக்கு அஞ்சலி அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த பாலசோதி, கோப்பாய் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பரமேஸ்வரன், நீர்வேலி சலவைத் தொழிலாளி கணபதிப்பிள்ளை சண்முகம், தெல்லிப்பழை கோவிந்தசாமி சண்முகராஜா.

**17.06.1981 தினபதி** யாழ். கொலை, கொள்ளை தீவைப்பு சம்பவங்களுக்கு மாநகராளுமன்றம் பலத்த கண்டனம். உறுப்பினர்கள் ஆவேசமான உரை. தினபதி படங்களுக்கு நன்றி. தலையங்கத்துக்கு பாராட்டு.

**22.06.1981 ஈழநாடு** தமிழ்த் தேசிய இனத்தைப் பாதுகாக்க அரசு தவறி விட்டது. ஆயுதப் படையினர் வாபஸ்பெற வேண்டும். - தமிழ் காங்கிரஸ் செயற்குழு தீர்மானம்.

**24.06.1981 வீரகேசரி** எங்களைக் கண்டதும் பொலிஸார் மதில் ஏறிக் குதித்து அப்பால் சென்றனர் யாழ். பொது நூல்நிலையக் காவலாளி பொலிஸ் விசாரணையில் தகவல்.

**06.07.1981 வீரகேசரி** அணுகுண்டை விட ஆத்மீக சக்திக்கு அதிக வலிமை உண்டு. - வவுனியா உண்ணாவிரதத்தில் சாவகச்சேரி எம்.பி.

**08.07.1981 வீரகேசரி** யாழ். நூலக எரிப்பு பற்றி எனக்கும் கவலை உண்டு. ஆனால் கண்டிக்கும் நிலையில் இல்லை. அமைச்சர் என்பதால் அரசின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டிருக்கிறேன் என்கிறார் தேவா.

**12.07.1981 வீரகேசரி** யாழ். நூலக புனரமைப்பு நிதிக்கு தாராளமாக உதவுங்கள் -மகாநாயக்க தேரோக்கள் அதிமேற்றிராணிமார் மற்றும் பிரமுகர்கள் வேண்டுகோள்.

**17.07.1981 தினகரன்** யாழ். வன்செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். - கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா

**12.10.1981 ஈழநாடு** ஈழத்தமிழருக்கு எப்படி உதவலாம் என்பது பற்றி முடிவு செய்ய அனைத்துக்கட்சி மகாநாடு தமிழக முதல்வர் கூட்டுகிறார் யாழ். நூலகத்துக்கு நூல்கள் வழங்க எம்.ஜி.ஆர் ஏற்பாடு.

**15.10.1981 ஈழநாடு** யாழ். மக்களின் கவலையில் நானும் பங்கெடுக்கின்றேன். யாழ். நகரில் ஆரியரத்னா.

**06.11.1981 ஈழநாடு** பொதுசன நூலகத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபா நூல்கள் யாழ். கிறீஸ்தவ ஐக்கிய சங்கம் வழங்கும்.

**13.12.1981 ஈழநாடு** யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் இன்றும் நாளையும் வீடுகளில் நிதிதிரட்டுவர்.

**21.12.1981 ஈழநாடு** யாழ்பொதுசன நூலகநிதி - பல்கலைக் கழகமாணவர்கள் ரூ 193,965 சேர்த்தனர்.

**20.1.82 ஈழநாடு** யாழ். நூல்நிலைய புனரமைப்புக்கு நிதி திரட்டும் பணியில் தொழில் பிரமுகர்கள் குழு.

**23.2.82 வீரகேசரி** யாழ் நூலக புனரமைப்புப் பணி பொது மக்களும் கூட்டணி எம்.பிக்களும் பெரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

**24.02.1982 ஈழநாடு** நூலகத்துக்கு வைக்கப்பட்ட தீ தமிழினத்துக்கு ஏற்பட்ட சவால்! இதனைக் கட்டி எழுப்புவது தமிழினத்தின் தூய கடமை - நூலக வார ஆரம்பத்தில் அமிர்

**25.02.1982 ஈழநாடு** யாழ் நூலக மீளமைப்புக்காக நிதி சேகரிப்பில் மாணவர் நிகழ்த்திய சாதனை கொடித்தினத்தன்று மாத்திரம் ரூ 2 லட்சத்துக்கு மேல் சேகரிப்பு

**3.6.1982 தினகரன்** பிரபாகரன் யாழ் நகரில் கைது.

**3.6.1982 தினபதி** யாழ். பொது நூல்நிலையம் எரிக்கப்பட்ட ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நூல் நிலையத்தின் முன்னால் நேற்றுக் கூட்டணியினர் உண்ணா விரதம் இருந்து துக்கம் அனுட்டித்தனர். உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட யாழ்.எம்.பி. திரு.வெ. யோகேஸ்வரன், திரு.நீலன் திருச்செல்வம், மன்னார் எம்.பி திரு.பி.எஸ். சூசைதாசன், கோப்பாய் எம்.பி திரு.எம்.ஆலால சுந்தரம் ஆகியோரை முதலாவது படத்தில் காண்க. செல்வா நிலைவால யத்தின் முன்னால் தமிழீழ விடுதலை அணியினரும் மாணவர்களும் உண்ணாவிரதம் இருந்தனர். சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களின் ஒரு பகுதியினர் இரண்டாவது படத்தில் காணப்படுகின்றனர்.

**04.06.1982 வீரகேசரி** தமிழகத்தில் கைதான யாழ் இளைஞர்களை இங்கு விசாரிக்க நியாயாதிக்கம் கிடையாது எனவே அவர்களை ஒப்படைக்கக்கூடாது செல்வா ஸ்தூபி உண்ணாவிரதத்தில் கோவை மகேசன் உரை.

**11.06.1982 வீரகேசரி** யாழ். பொது நூலகமே எனது அரசியல் வாழ்வுக்கு அத்திவாரமிட்டது ரோட்டரிக்கழக வைபவத்தில் ஜனாதிபதி பேச்சு

**17.07.82 மித்திரன்** யாழ் பொது நூலகத்துக்கு உதவ நடனம் ஆடுவதில் பெருமை அடைகிறேன். தமிழக ஆஸ்தான நர்த்தகி சுவர்ணமுகி கூறுகிறார்.

## நிறைவாக

இரண்டு வருடங்களுக்கு முன் இதே நாள் (ஜுன் 1) மாலை தும்பளையில் நடைபெற்ற அருட்தந்தை தாவீது அடிகளின் பிறந்த வீட்டையும், மாவிச்சை எனப்படும் வளவையும், பிரார்த்தனை நடைபெற்ற இயற்கை எழில் நிறைந்த புனித. லூர்து மாதா அன்னையின் தேவாலயத்தையும், அஞ்சலி நிகழ்வையும் ஒருபோதும் என் வாழ்வில் மறக்க முடியாது. என்னை அங்கு மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்ற நண்பன் ரூபாகரனையும், தாவீது அடிகளாரின் நினைவுக்குழு இணைப்பாளர் திரு. சீ. அந்தோனிமுத்து அவர்களையும் நன்றியோடு இன்றும் நினைவு கூருகின்றேன்.

இத்தொகுப்பை வெளியிட அனைத்து உதவிகளையும் செய்த அனைவருக்கும் நன்றிகூறுவதோடு தேடல்களில் நிறைய புதிதுபுதிதாக செய்திகள் கிடைப்பதனால் கூடிய விரைவில் விரிவாக இன்னொரு நூலையும் வெளியிட வேண்டும் என நினைக்கின்றேன். எல்லாம் அவன் செயல்!

**"மங்களகிரி"**
**மூளாய்,**
**சுழிபுரம்.**
**01.06.2015**

**- தங்க. முகுந்தன்**

**"உண்மையை எடுத்துரைப்பதே என் பணி"**

**இதற்காகவே நான் பிறந்தேன்.**

**இதற்காகவே உலகுக்கு வந்தேன். -** (யோவான் 18:37)


**04.06.1984 நடைபெற்ற நூலகத்திறப்பு விழா**
















இந்திய தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்வு

























ஈழநாடு

English Academy


மாநகரசபை கூண்டோடு ராஜினாமா;

யாழ். நூலகத் திறப்பு விழாவும் ரத்து!


















வலம்புரி
VALAMPURI
யாழ்.நூலகத் திறப்பு விழா ரத்து
மாநகர முதல்வர்-உறுப்பினர்கள்
கூண்டோடு இராஜினாமா !


VIRAKESARI
வீரகேசரி
யாழ். பொதுநூலக திறப்புவிழா திடீர் ரத்து
இரவோடு இரவாக நூலக சாவிக்கொத்து அபகரிப்பு



உதயன்
Registered as a Newspaper
UTHAYAN - A Lively National Tamil Daily
யரும் உறுப்பினர்களும் ராஜினாமா!
பொது நூலகத் திறப்பு விழா ரத்து!



தினக்குரல்
பொதுநூலகத்தை திறப்பது குறித்து சர்ச்சை
யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் பதவிதுறப்பு



செல்லன் கந்தையன் ஜே.பி., யூ.எம்.
திரு. இ. இராமலிங்கம்
கௌரவ வீரசிங்கம் ஆனந்த சங்கரி
THIS RENOVATED JAFFNA PUBLIC LIBRARY
WAS DECLARED OPEN BY
HON. VEERASINGHAM ANANDASANGAREE M.P.
FOR JAFFNA DISTRICT AND PRESIDENT T.U.L.F.
ON THE 14TH OF FEBRUARY 2003
AT THE REQUEST OF
HIS WORSHIP SELLAN KANTHAIYAN J.P., U.M.
MAYOR OF JAFFNA
IN THE PRESENCE OF
THE HON. MUNICIPAL COUNCILLORS AND
MUNICIPAL COMMISSIONER
MR E. RAMALINGAM


**பிழை திருத்தம்**


6ஆம் பக்கம் முதல் வரி 04.08.1986 என்பது 24.08.1986
10ஆம் பக்கம் 2ஆம் வரி 5.7.87 என்பது 5.7.82
29ஆவது வரி 22.07.1981 என்பது 22.07.1982
19ஆம் பக்கம் 10ஆம் வரி 15.10.1981 என்பது 13.10.1981
12ஆம் வரி 06.11.1981 என்பது 08.11.1981
14ஆம் வரி 13.12.1981 என்பது 15.12.1981
16ஆம் வரி 21.12.1981 என்பது 01.12.1981
25ஆம் வரி 25.02.1982 என்பது 25.03.1982 என்றும்
திருத்தப்பட வேண்டும்.







JEYASRI Printers